13.02.2024

சி.சி.33/2021 அ.சா.1 சங்கர் (Accused present)

(சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி)

1) பிரச்சனைக்குரிய சொத்தினை எதிரி ஒரு விஜயகுமார் என்பவருக்கு 20014ம் வருடம் சுத்த கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், வழக்கு நிலுவையிலிருந்த சமயத்தில் கொடுத்தார். மேற்படி விஜயகுமார் அந்த சொத்தினை கலாமணி, பி.ரமேஷ், வி.சுமித்ரா மற்றும் உமாமகேஸ்வரி ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், அது தொடர்பாக நான் பதிவாளருக்கு எனது ஆட்சேபணையை அனுப்பியுள்ளேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி விஜயகுமாருக்கு செய்து கொடுத்த கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் மேற்படி கலாமணி, பி.ரமேஷ், வி.சுமித்ரா மற்றும் உமாமகேஸ்வரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்பொழுது பிரச்சனைக்குரிய சொத்தில் மேற்படி கலாமணி, பி.ரமேஷ், வி.சுமித்ரா மற்றும் உமாமகேஸ்வரி தான் தங்களது பெயரில் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் இருக்கலாம்.

3) மேற்படி நபர்கள் மீது வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று இவ்வழக்கின் விவரங்களை குறிப்பிட்டு வட்டாட்சியர் அவர்களிடம் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.10 ரசீதை தவிர அதற்கு முன்பாகவோ அல்லது அதற்கு பின்னிட்டோ நான் வட்டி செலுத்தியதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எதிரி கொடுத்த கிரைய பத்திரத்தில் பிரச்சனைக்குரிய பூமியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் என்று கண்டுள்ளதென்றும் உண்மையில் 75 செனட் தான் உள்ளது என்றால்

சரிதான். ஆனால் எதிரிகள் கொடுத்த கிரையப்பத்திரத்தில் அவர்களாக எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றனர். மேற்படி எதிரிக்கு கிரையம் கொடுத்த காலத்தில் பிரச்சனைக்குரிய சொத்தை நான் வேறொரு நபருக்கு குத்தகைக்கு கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. எதிரி என் மீது கேத்தி காவல்நிலையத்தில் பிரச்சனைக்குரிய சொத்தை கிரையம் கொடுத்துவிட்டு அனுபவ சுவாதீனம் கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்திருந்தார் என்றால் மேற்படி கிரைய தேதிக்கு ஆறுமாதத்திற்கு பிறகு பொய்யாக புகார் கொடுத்திருந்தார்.

5) அவ்வாறு எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு சொத்தின் அனுபவ சுவாதீனத்தை ஒப்படைக்காததால் அந்த கிரைய தொகைக்கு மேற்படி காலகட்டத்திற்கு வட்டி தொகையாகத்தான் அ.சா.ஆ.10இல் கண்டுள்ள தொகையை நான் செலுத்தினேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு காவல்நிலையம் மூலமாக எதிரிக்கு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்ததால் பின்னிட்டு எதிரிக்கு வட்டி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

6) புகாரினை நான் தான் தயார் செய்தேன். உண்மையில் எதிரி என்னை மிரட்டி கிரையம் பெற்றிருந்தால் அந்த காலகட்டத்திலேயே புகார் கொடுத்திருப்பேன் என்றும் கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்ததால் தான் அப்போது புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என்னை ஏமாற்றி எதிரி கிரையம் பெற்றிருந்தால் எதிரியிடமிருந்து கிரையம் பெற்ற நபர்களையும் இவ்வழக்கில் எதிரிகளாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

7) அ.சா.ஆ.8 பவர் அதிகார பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்தேனா என்றால் எதிரி என்னை படித்து பார்க்க அனுமதிக்கவில்லை. அப்படி என்றால் அ.சா.ஆ.8 பவர் அதிகார பத்திரத்தில் நான் கையெழுத்து செய்யவில்லையா என்றால் இல்லை. அ.சா.ஆ.8இல் நான் கையொப்பமே செய்யாத நிலையில் என்னை எதிரிகள் வற்புறுத்தி கையொப்பம் வாங்கினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) அ.சா.ஆ.8 பவர் அதிகார பத்திரத்தை எதிரி தான் பதிவாளரிடம் கொடுத்தார். அதை பதிவாளர் படித்துவிட்டு அதில் பவர் எதுவும் கொடுக்கவில்லை என்று கூறி தூக்கி போட்டுவிட்டார். அதை நான் எடுத்துக்கொண்டேனா என்றால் ஆம். அதன்பிறகு அ.சா.ஆ.8ஐ நான் எப்போதாவது படித்து பார்த்தேனா என்றால் ஆம் படித்து பார்த்தேன். அ.சா.ஆ.8இல் கிரையத்தொகை ரூ.9 லட்சம் எனவும் அந்த தொகையை நான் முழுவதும் பெற்றுக்கொண்டதாக அதில் எழுதப்பட்டிருந்தது. நான் சொல்வதுபோல் எந்த ஒரு வாசகமும் அ.சா.ஆ.8இல் இல்லை என்றால் சரியல்ல.

9) எதிரிக்கு நான் கிரையம் கொடுத்த பிறகு அனுபவ சுவாதீனத்தை உடனடியாக நான் எதிரியிடம் ஒப்படைக்காததால் நான் கேட்டுக் கொண்டதன் பேரில் எதிரி அ.சா.ஆ.8 பவர் அதிகார பத்திரத்தை சொத்தை பராமரிக்கும் பொருட்டு எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதில் சொத்தில் வரும் வருமானத்தை முறையாக கணக்கு காட்ட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அச.ா.ஆ.8ஐ பதிவுசெய்வதற்காக பதிவாளர் அலுவலகம் எடுத்து செல்லப்படவில்லை என்றும் அதை பதிவாளரும் தூக்கி வீசவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுக் கொண்டதன்பேரில் அ.சா.ஆ.8ஐ எதிரி எனக்கு எழுதி கொடுத்தார் என்றும் தற்போது அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனது மகன் மற்றும் மகள் என் மீதும் பிரச்சனைக்குரிய சொத்தினை கிரையம் பெற்றவர்கள் மீதும் தாக்கல் செய்த வழக்கின் வாதுரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **(ஓ.எஸ்.24/2020இன் வாதுரை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த வாதுரையில் எனது மகன் மற்றும் மகள் 2020ம் ஆண்டு வரை வழக்குச்சொத்து குறித்து ஏற்பட்ட பிரச்சனைகள் எதுவும் தெரியாது என சொல்லியுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அது தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எப்படியாவது சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஒன்றுசேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

11) இவ்வழக்கு ஐந்து வருடம் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.